Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.

**SESSIONS CASE NO.89/2022**

Deposition of PW4 Witness for Defence

Defence Court

Name :Karthick Caste:

Father's Name :Ravi Calling :

Village : Religion:

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 25th July 2023.

**( A1 to A3 present )**

**முதல் விசாரணை-**

நான் சென்னை பூந்தமல்லியை அடுத்த புதுசத்திரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் சம்பவத்தில் இறந்து போன அசோக்குமார் எனது தம்பி. அசா.1 எனது தாயார். அ.சா.2 எனது தகப்பனார். எனது இன்னொரு தம்பியின் பெயர் நவீன் குமார். 12/12/2020 அன்று இரவு 08.30 மணியவில் நான், எனது பெற்றோர்கள் மற்றும் எனது தம்பிகள் ஆகியோர் எனது வீட்டிலிருந்த போது ராஜாவின் மகன் சதீஷ் எனது வீட்டிற்கு வந்து அசோக்குமாரை வெளியே போய் பேசலாம் என்று சொல்லி அழைத்து சென்றார். சதீஷ் எனது உறவினரின் பெண்ணான சுவேதாவை காதல் திருமணம் செய்து கொண்டார். நாங்கள் ஒட்டர் சாதியை சேர்ந்தவர்கள். சதீஷ் வன்னியர் சாதியை சேர்ந்தவர். திருமணத்திற்கு பின் சுவேதா தற்கொலை செய்து கொண்டார். அதன் பேரில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு சதீஷின் பெற்றோர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டார்கள். அப்பிரச்சனைக்கு எனது தம்பி அசோக்குமார் தான் காரணம் என்று சதீஷ் மற்றும் அவரது குடும்பத்தினர் விரோதம் கொண்டிருந்தார்கள். இரவு 09.00 மணிக்கு மேல் மதகன் மகன் அசோக் குமார், அ.சா.3, எனது வீட்டிற்கு வந்து புதுசத்திரம் பேருந்து

நிறுத்தம் அருகே எனது தம்பி அசோக் குமாரின் இடது விலாவில் கத்தி குத்தப்பட்டது அவர் இரத்த வெள்ளத்தில் கிடக்ஙகிறார் என்று சொன்னார். உடனே, நான் எனது தம்பி நவீன் குமார் மற்றும் எனது பெற்றோர்கள் சம்பவ இடத்திற்கு சென்றோம். அங்கு எனது தம்பி அசோக்குமார் இடது விலாவில் கத்தி குத்தப்பட்ட காயம் ஏற்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்தார். நாங்கள் உடனே காரில் எனது தம்பி அசோக்குமாரை திருவள்ளூர் அரசு மருத்துவ மனைக்கு எடுத்து சென்றோம். மருத்துவர் எனது தம்பி அசோக்குமாரை பரிசோதனை செய்து விட்டு அவர் இறந்துவிட்டதாக கூறினர். இது சம்மந்தமாக எனது தாயார் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

(சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் தரப்புக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டும், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் திரு.பி.தயாளன் ஆஜராகி இருந்தும் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படாததினால் சாட்சியின் சாட்சியம் முடிக்கப்படுகிறது).